have been asked to start an endowment of Rs. 25,000/-. If this is so, I think it is unnecessary burden and will it be removed?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது வேறு விஷயம். இதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 356, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

356—

காளான் வளர்ப்புப் பண்ணைகளில் பணிபுரிவோருக்கு ஊதியம் நிர்ணயம் செய்தல்.

**23711—திரு. ஆர். பி. பரமசிவம் :*

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் குடிசைத் தொழிலாகப் பெருகிவரும் காளான் வளர்ப்புப் பண்ணைகளில் பணிபுரிவோருக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காளான் வளர்ப்புப் பண்ணைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் செய்யக் கோரி தொழிலாளர் அல்லது நிர்வாகத் தரப்பினரிடம் இருந்து இதுநாள்வரை கோரிக்கைகள் ஏதும் பெறப்படவில்லை. இந்நிலையில் அத்தொழிலைக் குறைந்தபட்ச ஊதிய அட்டவணையில் சேர்ப்பது குறித்து எவ்விதமான பரிசீலனையும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைவ இறைச்சி என்று கூறப்படுகின்ற இந்த காளான் வளர்ச்சி பொதுவாக கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் பண்ணைகளாக வளர்க்கின்ற அந்த நல்ல தொழிலை ஏற்படுத்தி செய்து கொண்டு இருக்கிறார்கள். எப்போதுமே, எந்தத் தொழிலையும் மிக அற்புதமாகச் செய்கின்ற பாங்கினை உடைய அந்தக் கொங்குநாட்டு சிங்கங்கள் இந்தப் புதிய தொழிலையும் மிக விரைவாக நல்ல ஊக்கத்தோடு செய்து கொண்டு வருகிறார்கள். இந்த காளான் வளர்ப்பு என்பது ஒரு

1994 ஏப்ரல் 22]

நுணுக்கமான தொழில்; கிட்டத்தட்ட 100 டிகிரி சென்டிகிரேடிலே அதை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆர். பி. பரமசிவம் : வெப்பப்படுத்தி வளர்க்கின்ற முறை இருக்கின்றதே, அது அந்தத் தொழிலாளர்களுக்கு மிக அதிக வேலை தருகின்ற தொழிலாக இருக்கின்றது. எனவே, அந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு—அரசுக்கு கோரிக்கை வருமாயின், அந்தக் கோரிக்கை அடிப்படையில், அரசு குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளான் வளர்ப்புத் தொழிலில் ஆயிரத்திற்கும் குறையாத தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தால், அதை உறுதி செய்து, அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்வது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காளான் வளர்ப்பு என்பது இப்போது சென்னையை சுற்றிலும் வளர்க்கப்படுகிற சூழ்நிலை இருந்து வருகிறது. சாதாரணமாக ஒரு கிலோ 70 ரூபாய் என்றும், அது உலர்த்தப்பட்ட பிறகு 350, 400 ரூபாய் என்றும் விற்கப்படுகிறது. பதப்படுத்துகிற தொழிலில் நிறைய தொழிலாளர்கள் ஈடுபடுகிறார்கள். ஆகவே, அரசுக்கு கோரிக்கை வந்த பிறகு அதை நிர்ணயம் செய்தாலும், இதுபோன்ற தொழில்களில் தமிழ் நாட்டில் எத்தனை தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் 67 தொழில்கள் குறைந்தபட்ச சம்பளச் சட்ட அட்டவணையில் உள்ளன. அதில் 58 தொழில்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 1993 ஆம் ஆண்டு 4 தொழில்களுக்கு முதல்முறையாக குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 1994 ஆம் ஆண்டில் கடல் உணவு பதப்படுத்தல் தொழிலுக்கு முதல்முறையாக குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.